Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 213 / 2022

**DEPOSITION OF ACCUSED SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | கார்த்திக்ராஜா | Calling: | வங்கி மேலாளர் |
| Father's Name: | சேகர் | Religion: | |
| Village: | திருப்பத்தூர் | Age: | 31 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 07.03.2026

எதிரி ஆஜர்.

எ.த.சா.1 முதன்மை விசாரணை

நான் தற்போது எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க், ஆம்பூர் கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் கார்த்திக் என்பவர் எங்களுடைய வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அந்த கணக்கு 2019ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அவருடைய வங்கிக்கணக்கில் தொடர்ந்து பணப்பரிவர்த்தனைகள் நடந்து கொண்டிருக்கிறது. அவர் எங்களுடைய வங்கியில் வங்கி கணக்கு தொடங்கிய நாள் முதல் ஒரு காசோலை மட்டுமே திருப்பப்பட்டுள்ளது.அது இவ்வழக்கில் தொடர்புடைய காசோலை. 11.08.2022ம் தேதி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி காசோலை, காசோலை எண் 388 095, ரூ.1,00,000/–ற்கான காசோலை. ரமேஷ் என்பவரின் வங்கிக்கணக்கிலிருந்து கார்த்திக் என்பவருக்கு காசோலை கொடுக்கப்பட்டுள்ளது. கார்த்திக் என்பவர் அதை எங்கள் வங்கியில் 11.08.2022ம் தேதி பணப்பரிவர்த்தனைக்காக

செலுத்தும்போது வங்கிக்கணக்கில் போதிய பணம் இல்லை என எங்கள் வங்கியால் திருப்பப்பட்டுள்ளது. பணப்பரிவர்த்தனைகள் குறித்து அவரின் வங்கிக்கணக்கு ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும்.

புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை

புகார்தாரர் 2019லிருந்து எங்கள் வங்கியில் வங்கிக்கணக்கு வைத்து முறையாக பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். ஒருவர் வங்கிக்கணக்கில் பணம் இல்லை என்பது தெரிந்து வேண்டுமென்றே காசோலை கொடுத்து திருப்பப்பட்டிருந்தால் அது சட்டப்படி தவறு என்றால் சரிதான். இந்த காசோலையும் அதே போல் பணம் இல்லாமல் திருப்பப்பட்டது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) கார்த்திக்ராஜா

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K